# <u>2011–2012ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்</u>

**1) மின் ஆளுமைக்கான முதலமைச்சரின் உயரிய விருது**

மின் ஆளுமையின் மூலம், அரசின் அனைத்து சேவைகளையும் மக்களின் இருப்பிடத்திற்குக் கொண்டு சேர்ப்பதே தமிழக அரசின் சீரிய நோக்கமாகும். ஒவ்வொரு அரசுத் துறையும், தங்களது துறை சார்ந்த அனைத்து சேவைகளையும் மின் ஆளுமைத் திட்டத்தின் மூலம் மக்களிடம் கொண்டு செல்லப் பாடுபட வேண்டும். இந்த நோக்கத்தினை வெற்றிகரமாகச் செயல்படுத்திடும் துறைகளுக்கு ஊக்கமும், உரிய அங்கீகாரமும் அளித்திட "**மின் ஆளுமைக்கான முதலமைச்சரின் <u>உயரிய விருது</u>**" ஆண்டுதோறும் வழங்கப்படும்.

மேலும், வளர்ந்து வருகின்ற இளைய சமுதாயத்தினர், மாணவர்கள் மற்றும் மின் ஆளுமை ஆர்வலர்களுக்கிடையேயும் மின் ஆளுமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற வகையிலே, புதுமையான மென்பொருள் உருவாக்குகின்ற போட்டிகள் நடத்தப்பட்டு, அப்போட்டிகளிலே புதுமையான மற்றும் சிறந்த மின் ஆளுமைக்கான மென்பொருட்களை உருவாக்கிய வெற்றியாளர்களுக்கு "**<u>மின் ஆளுமைக்கான முதலமைச்சரின் உயரிய விருது</u>**" ஆண்டுதோறும் வழங்கப்படும்.

மாண்புமிகு முதலமைச்சரின் மின் ஆளுமைக்கான உயரிய விருதுகள், தமிழகம் மின் ஆளுமையின் உச்சத்தினை எட்டிட வழி வகுக்கும்.

**2) மதுரையில் பேரிடர் மீட்பு மையம்**

அரசுத் துறைகளின் அனைத்து மென்பொருட்கள் மற்றும் சேவைகள் மாநிலத் தரவு மையத்தின் (State Data Centre) மூலம் பாதுகாப்பான சூழலில் வழங்கப்பட்டுவரும் அதே வேளையில், இவற்றிற்கு குந்தகம் ஏற்படாத வகையில்,

தொடர்ந்து சீராக செயல்படுத்திட விரிவான தொடர் வணிகத் திட்டமிடல் (**BCP – Business Continuity Planning**) அவசியமாகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின் பேரில் இந்தியாவிலேயே முதன்முறையாக, 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மதுரையில் நிறுவப்படவிருக்கின்ற பேரிடர் மீட்பு மையம் (Disaster Recovery Centre) மற்ற அனைத்து மாநிலங்களுக்கும் ஒரு சிறந்த வழிகாட்டியாக அமையும். மாநிலத் தரவு மையத்தில் உள்ள தரவுகள் மற்றும் மென்பொருட்களுக்கு எந்த ஒரு இழப்புமின்றி முழுமையாக அவற்றைப் பாதுகாத்திடும் வகையில், மாநிலத் தரவு மையத்தின் மறுபிம்பமாக இப்பேரிடர் மீட்பு மையம் அமையும்.

**3) கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர்களுக்கு மேக கணினியிய தொழில்நுட்பத்தில் கணினி வழங்குதல்**

இணைய சேவைகளை உடனுக்குடன் வசதியான முறையில் பகிர்ந்தளிக்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட கணினி சார்ந்த வளங்களை, அதாவது, வலையமைப்புகள், மூலக்கணினிகள், சேமிப்பகங்கள், மென்பொருட்கள் மற்றும் சேவைகள் போன்றவற்றை வழங்கிடுவதில் மேக கணினியியம் (Cloud Computing) ஒரு முன்மாதிரியாகும். பயனர் கணினியில் மென்பொருட்கள் முன்னரே பதியப்படாத நிலையிலும், பயனரின் வலை உலாவி மூலம் மூலக்கணினியில் பதியப்பட்டுள்ள மென்பொருளைப் பயன்படுத்திடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதால், மேகக் கணினியியம், பயனர்கணினி–மூலக்கணினி (Client-Server) அமைப்பிலிருந்து மாறுபடுகின்றன.

மின் மாவட்டத் திட்டம் சார்ந்த மென்பொருட்களைப் பயன்படுத்துதல், கிராமக் கணக்குகளை கணினிமயமாக்கி கையாளுதல் மற்றும் பல்வேறு சேவைகளை தமது அலுவலகத்தில் இருந்தபடியே வழங்கிடும் வகையில் அனைத்து கிராம நிர்வாக

அலுவலர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்களுக்கும் மேக கணினியிய தொழில்நுட்பத்தில் கணினி வழங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான தொடரா செலவினம் கணினி ஒன்றுக்கு 8,000 ரூபாய் ஆகவும் அகன்ற அலைவரிசை இணைப்புக்கான தொடர் செலவினம் ஆண்டொன்றிற்கு 9,000 ரூபாய் ஆகவும் இருக்கும். இத்திட்டம் முதற்கட்டமாக முன்னோடி மின் மாவட்டங்களான கிருஷ்ணகிரி, அரியலூர், பெரம்பலூர், திருவாரூர், கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் 1.50 கோடி ரூபாய் தொடரா செலவினத்திலும் 1.70 கோடி ரூபாய் தொடர் செலவினத்திலும் செயல்படுத்தப்படும்.

**4) கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கணினிகளுக்கு அகன்ற அலைவரிசை இணைப்பு வழங்குதல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முந்தைய ஆட்சியில் கிராம ஊராட்சிகளைக் கணினிமயமாக்கிட 2005–ம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள 12,618 கிராம ஊராட்சிகளுக்கும் கணினிகள் வழங்கப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தற்போது அனைத்து கிராம ஊராட்சி அலுவலகங்களுக்கும் அகன்ற அலைவரிசை இணைப்பு வழங்கிட இசைவளித்துள்ளார்கள். அகன்ற அலைவரிசை இணைப்பு ஒன்றிற்கான ஆண்டு செலவினம் 7,000 ரூபாய் என்ற அளவில் இத்திட்டத்திற்கான தொடர் செலவினம் ஆண்டொன்றிற்கு 10,00 கோடி ரூபாய் ஆகும்.

**5. குடிமக்கள் தொடர்பு மையம்**

மக்களுக்குத் தேவையான தகவல்களை தெரிவிக்கவும், மக்களுடனான அரசின் தொடர்புகளை மேம்படுத்தவும் மற்றும் பல்வேறு அரசுத் துறை சார்ந்த சேவைகளைக் குடிமக்களுக்கு வழங்கவும், குடிமக்கள் தொடர்பு மையம் ஒன்றினை சென்னையில் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான உத்தேச செலவினம் 6.00 கோடி ரூபாய் ஆகும். இம்மையத்தின் மூலம் மக்கள் குறை தீர்ப்பு, அரசுத்

திட்டங்கள் குறித்த விளக்கங்கள், அரசு அலுவலகங்களின் தொடர்பு விவரங்கள், சேவைகளுக்கான விண்ணப்பம் / மனுக்களின் தற்போதைய நிலை போன்றவை அளிக்கப்படும்.

**6) மேம்படுத்தப்பட்ட ஊரக வணிக வெளிப்பணிக் கொள்கை**

கிராமப்புற இளைஞர்களுக்கு தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வேலைவாய்ப்புகளை உருவாக்கிட, கிராமப்புறங்களில் ஊரக வணிக வெளிப்பணி மையங்கள் அமைக்கப்படும். இம்மையங்களை அமைப்பதற்கு ஆர்வமுள்ள தொழில் முனைவோரை ஈர்ப்பதற்காக தற்போதுள்ள ஊரக வணிக வெளிப்பணி கொள்கையை மேம்படுத்தி, மறுவடிவமைத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு செய்வதன் மூலம் கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களுக்கு இணையாக தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். இந்த மேம்படுத்தப்பட்ட ஊரக வணிக வெளிப்பணிக் கொள்கையின் அடிப்படையில், முதற்கட்டமாக, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதியில் ஒரு ஊரக வெளிப்பணி மையம் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் உருவாக்கப்படும்.

**7) கிராமப்புற இளைஞர்களுக்கு தகவல் தொழில்நுட்பவியல் பயிற்சி அளித்தல்**

தகவல் தொழில்நுட்பத்தில் உலகளாவிய போட்டிகளையெல்லாம் எதிர்கொண்டு, பன்னாட்டு தொழில் நிறுவனங்களில், வேலைவாய்ப்பினை கிராமப்புற இளைஞர்களுக்கும் பெற்றுத் தருகின்ற வகையிலே, அவர்களை தயார்படுத்திடும் வகையிலே, சிறந்த தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு தேவையான பயிற்சி அளித்திடும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இச்சிறப்பு வாய்ந்த திட்டம், கிராமப்புற இளைஞர்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை நிச்சயம் உருவாக்கும். இதன்மூலம் சுமார் 2500 மாணவர்களுக்கு, 2011–2012 ஆம் ஆண்டில் 5.00 கோடி ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.

## 8) நகர்ப்புற பொது சேவை மையங்கள்

முன்னோடி மின் மாவட்டமான கிருஷ்ணகிரி மாவட்டம், அரசின் சேவைகளை கடைநிலை குடிமக்கள் வரை சிறப்பாகவும் திறப்படவும் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மின் மாவட்டத் திட்டத்தினை செயல்படுத்தி வருகின்றது. ஏற்கனவே, பொது சேவை மையங்கள் மூலம் வருவாய் துறை, சமூக நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, ஆகிய துறைகளின் சேவைகள் கிராம அளவில் வழங்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம், குடிமக்கள், அரசின் சேவைகளான பட்டா, சிட்டா, பல்வேறு சான்றிதழ்கள், திருமண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை போன்றவற்றிற்கு விண்ணப்பிக்கவும், பெற்றுக்கொள்ளவும் இயலும். இதைப்போன்ற மையங்கள், சென்னையிலும் அதனை சுற்றியுள்ள புறநகர்ப்பகுதிகளிலும் அமைக்கப்படும். இம்மையங்களின் மூலம், ஒளி, ஒலி மற்றும் தரவு வாயிலாக மின்ஆளுமை, கல்வி, சுகாதாரம், தொலை–மருத்துவம், பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் இதர தனியார் சேவைகளை பொதுமக்களுக்கு வழங்கிட முடியும்.

## 9) மாநிலத் தலைமைச் செயலகப் பணியாளர்களுக்கு கணினி பயிற்சி

தமிழக அரசு நிர்வாகத்தில் தலைமைச் செயலகம் ஒரு அச்சாணியாக விளங்குவதால் தலைமைச் செயலகப் பணிகள் துரிதமாக நடைபெறுவது அவசியமாகிறது. ஆகவே, மாநிலத் தலைமைச் செயலகப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் அடிப்படை பயிற்சியில் கணினி பயிற்சியினையும் ஒரு பாடமாக சேர்த்து வழங்கிட அரசு முடிவெடுத்துள்ளது. இதன் மூலம் தலைமைச் செயலக பணிகளை துரிதமாகவும், தரமாகவும், குறித்த நேரத்திலும் பணியாளர்கள் மேற்கொண்டிட வழிவகை ஏற்படும்.

**10) மின் ஆளுமை விழிப்புணர்வு முகாம்**

"**அரசைத் தேடி மக்கள்**" என்ற நிலையை மாற்றி "**மக்களை நாடி அரசு**" என்ற நிலையை உருவாக்குவதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய சிந்தனையாகும். அச்சீரிய சிந்தனையை செயலாக்கிட மின் ஆளுமை அவசியமாகும். ஆகவே, மின் ஆளுமை குறித்த விழிப்புணர்வை கடைக்கோடி பாமர மக்களுக்கும் கொண்டு சென்றிட மின் ஆளுமை விழிப்புணர்வு முகாம்கள் வட்டார அளவில் மக்கள் இயக்கமாகவே நடத்தப்படும்.